**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

## OS.NO. 26/2020 PW-2

| | |
|---|---|
| Name | பாலாஜி |
| Husband/Father Name | குப்புசாமி |
| Village /Area | மருதம்பாக்கம் |
| Taluk | |
| Occupation | |
| Age | 29 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 23.09.2024 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

### முதல் விசாரணை

எனது சாட்சியத்தை பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். எனக்கு படிக்க தெரியும். நான் சொன்னதை தான் டைப் செய்யப்பட்டுள்ளது. தாவாவில் கோரியுள்ள பரிகாரம் வேண்டி உத்திரவிட கேட்டுக்கொள்கிறேன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.1 தாவா சொத்திற்கு சம்மந்தமான தோராய பட்டா என்றால் ஆமாம். வ.சா.ஆ.1 ஆவணத்தின் பின்பக்கதில் உள்ள வரைபடத்தில் கோடிட்ட இடம் தான் உங்கள் வீடு என்றால் ஆமாம். அந்த வீடு யார் பெயரில் உள்ளது என்றால் என் அப்பாவின் பெயரில் உள்ளது. வரைபடத்தில் காணப்படும் பகுதியில் நீங்கள் சொத்து வாங்கியுள்ளீர்களா என்றால் ஆமாம் அம்பிகா அம்மாளிடம் இருந்து நான் வீடு வாங்கினேன். அம்பிகா அம்மாவிடம் காலிஇடமாக கிரயம் பெற்றீர்களா வீடாக வாங்கினீர்களா என்றால் வீடாக வாங்கினேன்.

நீங்கள் கிரயம் பெற்ற வீட்டின் வரி ரசீது உள்ளிட்ட ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. நீங்கள் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உங்கள் அப்பா வீடு பற்றியும் உங்கள் வீடு பற்றியும் தனிதனியாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். நீங்கள் கிரயம் பெற்றீருப்பது வீடு இல்லை காலி மனை என்றால் சரியல்ல. உங்கள் அப்பாவின் வீட்டிற்கு வாசல் வடக்கு பக்கம் தெருவை நோக்கி அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த ரோடு கிழக்கு மேற்காக அமைந்துள்ளது அந்த ரோட்டில் தான் நீங்கள் போக்குவரத்திற்கு பயன்படுத்தி வருகிறீர்கள் என்றால் ஆமாம்.

உங்கள் சொத்தில் பிரதிவாதிகள் அத்துமீறி பிரவேசிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பை உங்கள் அப்பா தான் கொடுத்தார் என்றால் இல்லை நானும் சேர்ந்து தான் கொடுத்தேன். உங்கள் வீட்டிற்கு வழியே இல்லை என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. உங்கள் வழியில் மறிக்க கூடிய வகையில் பிரதிவாதி எந்த கட்டிடமும் கட்டவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல் நீங்கள் எந்த வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பவில்லை உங்கள் அப்பா தான் அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல. உங்கள் அப்பா அனுப்பிய அறிவிப்பிற்கு பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் ஆமாம்.

பிரதிவாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு அனுப்பிய பதிலுரையிலும், வழக்கு எதிர் உரையிலும் வடக்கு தெற்காக வழி எதுவும் இல்லை என்று சொல்லியிருக்கிறார் என்றால் சரியல்ல. பல ஆண்டுகளாக அந்த வழியை தான் நீங்கள் பயன்படுத்தி வருவதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்த ஆவணங்களிலும் பொது வழி பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல. எந்தவித வழக்கு மூலமும் இல்லாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/- ************
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.